**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 105 /2020 வா.சா.2**

2026–ம் ஆண்டு மார்ச் திங்கள் 03–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ஆண்டிச்சாமி | தந்தை பெயர்: சின்னையாக் கோனார் |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

**<u>03.03.2026:</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. தாவாச் சொத்து 81/3 C ஆகும். அதன் விஸ்தீரணம் 1 ஏக்கர் 37 செண்டாகும். தாவாச் சொத்து காணப்பட்டி கிராமத்தில் உள்ளது . நான் களத்துப்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். 12 வருடமாக குடியிருந்து வருகிறேன். எங்கள் ஊருக்கும் சொத்து ஊருக்கும் சுமார் 2 கி.மீட்டர் துாரம் உள்ளது.

2.எனது பிரமாணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள விவரமான நான் நெல் , கடலை விவசாயம் செய்கிறேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நெல், கடலை போன்றவற்றை எந்த சர்வே எண்ணில் சாகுபடி செய்தேன் என்ற விவரத்தை எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லவில்லை . நான் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள நல்லதம்பி என்பவர் மணப்பாறைக் கிராமத்தில் உள்ளார். மணப்பாறையில் எந்த முகவரியில் உள்ள என்று எனக்கு தெரியாது . மணப்பாறை மண்டி கடைத் தெருவில் வைத்து போன மாதம் நல்லதம்பியை பார்த்தேன். எனது பிரமாணவாக்குமூலத்தில் நல்லதம்பி மணப்பாறையில் மண்டி கடை வைத்துள்ளதற்கு நான் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை . எனது பொருட்களை விற்பனை செய்ததற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

3. 09.04.1992 ல் நான் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ள கிரையப் பத்திரம் பதிவு செய்யப்பட்டது . நான் மேற்படி பத்திரத்தில் காணப்பட்டி கோவிலில் வைத்து கையொப்பம் செய்தேன். வாதி அதனை தயார் செய்து கொண்டு வந்தார். அதில்

நானும், நல்லதம்பியும் கையொப்பம் செய்தோம். அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 1 பக்கம் கையொப்பம் செய்தோம் . வாதி மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரத்தை எங்கு வைத்து தயார் செய்து வந்தார் என்று எனக்கு தெரியாது. வாதி தயார் செய்யும் போது யார் உடன் இருந்தார் என்று எனக்கு தெரியாது . வாதி எவ்வளவு ரூபாய் பத்திரத்தில் தயார் செய்தார் என்றால் 1 ரூபாய் பத்திரம் என்று நான் கையொப்பம் செய்வதற்கு முன்பு சொன்னார்.

4. தாவாச் சொத்தை நான் பார்த்துள்ளேன் . 30 வருடத்திற்கு முன்பாக பார்த்துள்ளேன். வெள்ளையன் 10–11 வருடத்திற்கு முன்பு இறந்துவிட்டார் . தற்போது சொத்து யார் பெயரில் உள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது. தாவாச் சொத்தை யார் அனுபவத்து வருகிறார் என்பதற்கான ஆவணங்கள் நான் பார்க்கவில்லை . யார் அனுபவம் செய்து வருகிறார் என்ற விவரம் நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது . வாதி 15 வருடத்திற்கு முன்பாக மாங்கன்று வைத்தார்.

5. தற்போது தாவாச் சொத்து யார் பெயரில் பத்திரம் உள்ளது என்றால் அது பற்றி தெரியாது. நாங்கள் கோவிலில் வைத்து கையெழுத்து செய்தோம் , அதன் பின்பு வாதி பத்திரம் பதிந்தாரா என்ற விவரம் எனக்கு தெரியாது . வாதி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் தோட்டம் வைத்திருந்ததால் பழக்கம் . வாதி அய்யாச்சாமி ஆய்வாளராக பணிபுரிந்தார். ஆய்வாளர் என்ற முறையில் எனக்கு வாதி பழக்கம் . நான் சொல்வது போல் நல்லதம்பியுடன் மண்டிகடை மூலம் பழக்கம் என்று சொல்வது பொய் என்றாலும், நான் உண்மையிலேயே விவசாயம் செய்திருந்தால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் , ஆவணம் செய்யாததால் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . ஆய்வாளர் என்பதால் வாதி தயாரித்து வந்த பத்திரத்தில் கையொப்பம் செய்தேன் என்றாலும் அதன் உண்மை தன்மையை எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல . உண்மையில் வெள்ளையன் தாவாச் சொத்தை பொறுத்து யாதொரு கிரைய ஒப்பந்த பத்திரம் வாதிக்கு ஏற்படுத்தி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதி தாவாச்சொத்தை மோசடியாக அபகரிப்பதற்காக உருவாக்கிய கிரைய ஒப்பந்த பத்திரத்தில் நான் கையொப்பம் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் எனது பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வாதி எந்த காலத்திலும் தாவாச் சொத்தை அனுபவிக்கவில்லை

என்றால் சரியல்ல. மேற்படி கிரைய ஒப்பந்த பத்திரம் 1992ல் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்பதால் மேற்படி பத்திரம் காலவதியாகிவிட்டது என்றாலும் அதனால் நான் பிரமாணவாக்குமூலத்தில் சொல்லியுள்ளது போல் வெள்ளையனின் வாரிசுகள் வாதிக்கு கிரையப்பத்திரம் பதிந்த கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)